








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 13.10.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- புத்தகங்கள்













The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

# இந்திய நிகழ்வுகள்

- நாட்டு மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்பாக புகார்களின் பேரில் விசாரிக்கவும், நாட்டில் நடைபெறும் சில அத்துமீறல்கள் தொடர்பாக தாமாகவே முன்வந்து விசாரணை நடத்தவும் அதிகாரம் படைத்த அமைப்பாக தேசிய மனித உரிமை ஆணையம் செயல்பட்டு வருகிறது.
  - இந்த அமைப்பு **தொடங்கப்பட்ட 25 ஆம் ஆண்டு** விழாவை (அக்டோபர் 12) முன்னிட்டு சிறப்பு தபால்தலை பிரதமரால் வெளியிடப்பட்டுள்ளது.
- **குறிப்பு:**
  - தேசிய மனித உரிமைகள் ஆணையம் **அக்டோபர் 12, 1993** ஆம் ஆண்டு, **மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993**–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டது.
  - இதன் தற்போதைய **தலைவர் - H.L.தத்து**
  - தமிழக மனித உரிமைகள் ஆணையம் **ஏப்ரல் 17,1997ல்** ஏற்படுத்தப்பட்டது
  - தமிழக மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் **-T. மீனாகுமாரி.**

- ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா. சபையின் மனித உரிமைகள் அவையில் இந்தியா உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளது. **193 நாடுகளை** உறுப்பினர்களாக கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அவைக்கான உறுப்பினர் தேர்வில் இந்தியா **188 வாக்குகள்** பெற்று, ஜனவரி முதல் மூன்றாண்டுகளுக்கு, ஐ.நாவின் மனித உரிமைகள் அவையில் உறுப்பினராக செயல்படவுள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து, **பிஜி, வங்கதேசம், பக்ரைன் மற்றும் பிலிப்பைன்ஸ்** ஆகிய நாடுகளும் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- **குறிப்பு:**
  - ஐ.நா மனித உரிமைகள் **அவை 2006 ஆம் ஆண்டு** தொடங்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் **சுவிட்சர்லாந்தின் ஜெனிவா-வில்** உள்ளது.

# உலக நிகழ்வுகள்

- உலகின் மிக நீண்ட விமான பயணத்தை, **“சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்”**



WeShine Academy TM

ஆனது சிங்கப்பூருக்கும், அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கும் இடையே தொடங்கியுள்ளது. உலகிலேயே மிக நீண்ட விமான பயணம் இதுவாகும், தொடர்ந்து 19 மணி நேரம் இந்தப் பயணம் நீடிக்கும்.

  - தொலைதூரப் பயணங்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறைந்த எரிபொருளில் நீண்ட தொலைவு செல்லக் கூடிய **A 350-9000** விமானம் மூலம் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளது.

- 2018 ஹென்லே பாஸ்போர்ட் குறியீட்டு பட்டியலில் (2018 **Henley Passport Index)** **இந்தியா, 81-வது** இடத்தில் உள்ளது.
  - இப்பட்டியலில், **ஜப்பான் நாட்டின் பாஸ்போர்ட்** ஆனது முதலிடத்தில் உள்ளது.
- **குறிப்பு:**
  - 2018 பாஸ்போர்ட் குறியீட்டு பட்டியலின் படி **இந்தியர்கள் 60 நாடுகளுக்கு விசா** இல்லாமல் பயணிக்கலாம்.

- அமெரிக்கா மற்றும் **6 NATO நாடுகள் இணைந்து "Clear Sky 2018"** என்ற விமானப்படை பயிற்சியில் உக்ரைனில் ஈடுபட்டு வருகிறது. நேட்டோ (NATO) என அறியப்படும் **North Atlantic Treaty Organization** என்பது **1949 ஆம் ஆண்டு** ஏப்ரல் 4 ஆம் நாள் உருவான ஒரு இராணுவ கூட்டணி ஆகும்.
  - இதன் தலைமையில் **பெல்ஜியத்தின் தலைநகரான Brussels** - இல் உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- உலக மல்யுத்த சாம்பியன் போட்டி தரவரிசையில் 65 கிலோ எடைப் பிரிவில், இந்திய வீரரான "**பஜ்ராங் புனியா**" மூன்றாவது இடத்தைப் பிடித்து, உலக மல்யுத்த சாம்பியன் போட்டி தரவரிசையில் இடம் பிடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
  - இப்பிரிவில், துருக்கி வீரர் **செல்ஹாட்டின் கிளிசலாயன்,** ரஷ்ய வீரர் இலியாஸ் பெபுலட்டோவ் ஆகியோர் முதலிரண்டு இடங்களைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்று வரும் **ஆசிய பாரா ஒலிம்பிக் போட்டியில்,** மகளிர் **பி1 செஸ்** போட்டியில் இந்தியாவின் **கே ஜெனித்தா ஆன்டோ** இந்தோனேசியாவின் மருங்கை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளர்கள் **"உலகின் முதல் உயிர் - மின்னணு மருந்தை" (World's First Bio- Electronic Medicine)** உருவாக்கியுள்ளனர். இந்த உயிர் மின்னணு மருந்து, நரம்பு செயல்படும் வேகத்தை அதிகரிக்கும் மற்றும் ஒரு சேதமடைந்த நரம்பு சிகிச்சை முறையை மேம்படுத்துகிறது.

## புத்தகங்கள்

- **The Paradoxical Prime Minister: Narendra Modi And His India"** என்ற ஆங்கிலப் புத்தகத்தை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் **"சசி தரூர்"** எழுதியுள்ளார். இப்புத்தகம் அக்டோபர் 2 அன்று வெளியிடப்பட்டுள்ளது.